# மனிதனது அங்கவயங்களைச் சார்ந்த கூட்டுவினைகளின் பொருள் சிறப்பும் செயல் சிறப்பும்

*ரா. மோகனதாஸ்*

## 1.1 முன்னுரை

கூட்டுவினைகள் என்பது தமிழில் புதியதாக உருவாக்கப்பட்ட ஒரு மொழிக்கூறு அல்ல. இவற்றின் தோற்றத்தையும் பயன்பாட்டையும் சங்க இலக்கியத்திலும் பல இடங்களில் காண முடிகிறது. கருத்துப் பரிமாற்றத்தின் பொருட்டு உருவாக்கப்பட்டிருக்கும் இவை, இன்றைய உரைநடை உலகின் ஆற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்திக் காட்டும் சொற் கூறுகளாக வாழ்வு பெற்றிருக்கின்றன. புதிய பொருள், புதிய எண்ணம் மற்றும் புதிய சிந்தனை ஆகியவற்றைச் செவ்வனே வெளிப்படுத்த வேண்டி, பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இச்சொற்கூறுகளின் துணையோடு தமிழ் மொழியும் தனது கருத்துப் பரிமாற்றத் தேவையைச் சிறப்பாகப் பூர்த்திச் செய்து வந்துள்ளதை நன்கு உணர முடிகிறது.

கூட்டுவினை என்பது இரு சொற்களால் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு பதிமமென்பதால், இதன் சொல்லமைப்பில் அடிச்சொல்லும் வினையாக்கியுமாக இரு சொற்கள் அமைந்திருக்கும். அடிசொல்லாகப் பெயர், இடை மற்றும் வினை போன்ற சொற்களைத் தமிழ்க் கூட்டுவினைகள் பெற்று வருபவையாக அமைந்துள்ளன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களின் வழி உணர முடிகிறது.

| **அடிச்சொல்** | + | **வினையாக்கி** | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | | | | | |
| இன்பம் | + | உறு | = | இன்பமுறு | be happy |
| துன்பம் | + | படு | = | துன்பப்படு | suffer |

**இடை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முன் | + | படு | = | முற்படு | try |
| முன் | + | ஏறு | = | முன்னேறு | progress |

**வினை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்டு | + | பிடி | = | கண்டுபிடி | discover |
| பரிந்து | + | உரை | = | பரிந்துரை | suggest |

## 1.2. கட்டுரையின் நோக்கம்

கூட்டுவினைகளை உருவாக்கித் தெளிவான பொருளை விவரிப்பதில் அடிச்சொற்களும் வினையாக்கிகளும் ஆக்கரமாகச் செயலாற்றுகின்றன. பெரும்பாலும் இவ்வாக்கத்தில் வினையாக்கிகள் தான் செயலினைச் செய்விக்கும் ஆக்கக்கூறாகக் கருதப்படுகிறன. எனினும், கூட்டு வினையாக்கத்தில் ஈடுபடும் அடிச்சொற்களும் புதுப்பொருண்மை வெளிப்பாட்டிற்கு ஏதுவாகச் செயல்படுவதைப் பல இடங்களில் காண முடிகின்றது. இதன் அடிப்படையில், மனிதனது கை, கால், தலை, கண், செவி, வாய் மற்றும் மூக்கு ஆகியவற்றைப் அடிச்சொற்களாகக் கொண்டு உருவாகும் கூட்டுவினைகள் எவ்வாறு புதுப்பொருண்மைக்கும் செயல் சிறப்பிற்கும் வழிவிடுகின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## 1.3 அங்கவயங்களைச் சார்ந்த கூட்டுவினைகள் தோன்ற காரணம்

அங்கவயங்களைச் சார்ந்து எழுந்திருக்கும் கூட்டுவினைகளின் தோற்றத்தை அறிவது மிகவும் சிக்கலான காரியம் அல்ல. காரணம், இவை தற்காலத்தில் புத்தம் புதியதாக உருவாக்கப்பட்ட மொழிக்கூறல்ல. இவற்றுள் பெரும்பான்மையானவை மரபுத் தொடர்களாகப் பன்னெடுங்காலமாகப் பயன்பாட்டில் அமைந்துள்ளவையாகும். மேலும், இவை காலங்காலமாக இலக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருவதை காண முடிகிறது (மருத்தூர் அரங்கரசன், 1994 : 1014 – 1018). மொழியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள் கூறும் சொற்கள் பல இருப்பதால் மனிதன் ஒருமுறை பயன்படுத்திய சொல்லையே வேறு சமயத்தில் பிறபொருளை உணர்த்துவதற்குப் பயன்படுத்தும் இயல்பினால் இவ்வகைச் சொற்களைச் சார்ந்த கூட்டுவினைகள் உருவாவதைப் பார்க்க முடிகிறது. இதனைப் பற்றிக் கருத்துரைக்கையில் தங்கமணியன் பின்வருமாறு கூறுகிறார் :

மாந்தன் புறவுலகை அறியும்போது ஒரு பொருளைக் குறிக்க பயன்படுத்திய அதே

> சொல்லை, அப்பொருளின் சிறப்பியல்புகளை விளக்கவும் பயன்படுத்துகிறான். அதாவது பழைய சொல்லையே புதுமுறையில் பயன்படுத்துகின்றான். புறவுலக வளர்ச்சியினால் உண்டாகின்ற பொருளுக்கோ நிகழ்ச்சிக்கோ பெயரிடுகின்ற தேவை ஏற்படுமானால், அதனோடு தொடர்புடைய பழைய சொல்லையே புதுப் பொருண்மைக்கும் பயன்படுத்துகிறான். இதனால் சொல்லின் பொருண்மை விரிவடைகின்றது. அதாவது பழைய பொருண்மையோடு புதிய பொருண்மையையும் உணர்த்த உதவுகிறது. *( தங்கமணியன், 1986 : 64)*

பொதுவாகச் சொற்களின் தோற்றத்தை விளக்குவதில் ஏற்படும் சிக்கல்களை விளக்குவதற்கு இவரது உரை ஏற்புடையதாகவே அமைந்திருந்தாலும் எல்லா நிலைகளிலும் இவ்விளக்கம் ஏற்புடையதாகாது.

சில சமயங்களில் பொருள் வளர்ச்சி என்பதும் சொற்பிறப்பென்பதும் மூல பொருள்களிலிருந்து பல்வேறு புதிய மாறுபாடுகள் தோன்றுவதால் ஏற்படுகின்ற அடிச்சொற்களே (மூலச் சொற்களே) இவற்றின் மூலாதாரமாகிறது என்று ஏற்றுக் கொண்டாலும், புலனுறுப்புகளைச் சார்ந்தகூட்டுவினைகளின் தோற்றத்தில் இதன் உண்மையைத் தெளிவாகக் காண முடிகிறது. இதன் அடிப்படையில் மனிதன் தனது புலனுறுப்புகளைக் கையாண்டு புதுப்பொருண்மை எல்லையை விரிவாக்கிக் கொண்டிருக்கும் திறத்தையும் இச்சொற்கள் அளவிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளன.

## 1.4 இவ்வகைக் கூட்டுவினைகளின் பொருண்மை நிலையும் செயல்தன்மையும்

### 1.4.1 பொருண்மை நிலை

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல்காப்பியம், சொல்லதிகார நூற்பா 155) என்று பொதுப்பட நாம் எற்றுக் கொண்டாலும், ஒரு சொல்லின் சுயப்பொருளை வெறுமனே அதன் கட்டுறுப்புச் சொற்களிலிருந்து அறிந்து கொள்வது எளிதல்ல. ஓவ்வொரு சொல்லும் தத்தமக்குரிய சுயப்பொருளின் வழியே தான் அறியப்படுகிறது என்றாலும் அச்சொற்கள் பொருளுணர்த்தும் போது, அவற்றின் பொருள் அச்சொற்களோடு மட்டுமல்லாது, மனிதனது எண்ணங்களையும் பிரதிபலிப்பதாகவே அமைந்திருக்கின்றது. இதனையே புலனறிவு என்பது புறவுலகின் தோற்றங்களே என்பார் தங்கமணியன். மேலும்,

> மனிதனது மனத்தில் எழுகின்ற பொருளின் பிரதிபலிப்பில் இருந்து வேறுபட்ட – தனித்தியங்குகின்ற தூய குறியீடு என்று நோக்கக்கூடாது. அது மனித மனத்தில் எழுகின்ற பொருளின் பிரதிபலிப்போடு பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது. *(தங்கமணியன், 1986 : 86)*

என்றும் கூறுகிறார். ஆகையால் மனிதனால் செய்விக்கப்படும் செயல்கள் எனத் தனித்தும், உணர்வோடும், பகுத்தறிவோடும் இணைந்த வேட்கையின் வெளிப்பாட்டினைத் தெளிவிக்கும் கூட்டுவினைகள் எனப் பகுத்தும் ஆராய்வது சிறப்பாக அமையும்.

புலனுறுப்புகளின் பெயர்களை அடிச்சொற்களாகப் பெற்று உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டுவினைகளைச் சார்ந்த பொருண்மை ஆய்வு மிகவும் சிக்கலானது அல்ல. பார்த்தக், கேட்ட மாத்திரத்திலேயே பொருள் உணர்த்தும் சொற்களாக இவை அமைந்திருக்கின்றன. இருப்பினும், பொருண்மை நிலையை ஆராய்வதற்கு முன்பு இவற்றின் பொதுப் பாகுப்பாட்டினை உணர்ந்து கொள்வது சிறப்பாக அமையும். பொதுவாக மனிதனது அங்கவயங்களைச் சார்ந்து உருவாகியிருக்கும் கூட்டு வினைகளை இரு குழுக்களாகப் பிரிக்கலாம்.

**1.4.1.1. முதல் நிலைக் கூட்டுவினைகள்**

**1.4.1.2. இரண்டாம் நிலைக் கூட்டுவினைகள்**

### 1.4.1.1. முதல்நிலைக் கூட்டுவினைகள்

முதல் நிலைக் கூட்டுவினைகள் என்பது முன்னம் குறிப்பிட்ட புலன்களின் பெயர்களையே அடிச்சொற்களாகக் கொண்டு அமைந்தவையாகும்.

| | |
|---|---|
| கைக்கொள் | master |
| கண்ணடி | wink |
| தலைசாய் | agree |
| செவிகொடு | listen |
| கால்கட்டுப்போடு | get someone to marry |
| வாயடி | be talkative |
| மூக்கறு | shame someone |

### 1.4.1.2. இரண்டாம் நிலை கூட்டுவினைகள்

இரண்டாம் நிலைக் கூட்டுவினைகள் புலன்களின் பெயர்களை அடிச்சொற்களாகக் கொள்ளாது அவற்றினால் செய்விக்கப்படும் தொழிற்பெயரை அடியாகப் பெற்று வருபவையாகும். தமிழில் இவ்வகைக் கூட்டுவினைகளே அதிகமாக உருவாகியுள்ளன.

| செயல் | உறுப்பு | கூட்டுவினை |
|---|---|---|
| கொடுத்துவை | கை | trusting something to someone |
| நோட்டமிடு | கண் | take a look |
| கேள்வியுறு | செவி | heard |
| நடனமாடு | கால் | dance |
| சூதாடு | வாய் | argue |
| மோப்பமெடு | மூக்கு | smell |

இவ்விருவகைக் கூட்டுவினைகளையும் பொருண்மை நிலையில் இருவகையாகப் பிரிக்கலாம்.

**1.4.1.3. மரபுவகைக் கூட்டுவினைகள்**
**1.4.1.4. மரபல்லாவகைக் கூட்டுவினைகள்**

இவற்றுள் இரண்டாம் நிலை கூட்டுவினைகளைக் காட்டிலும் முதல் நிலை கூட்டுவினைகளே பெரும்பாலும் மரபுவகைக் கூட்டுவினைகளாக அமைந்து வருகின்றன. இக்கட்டுரையிலும் முதல் நிலைக் கூட்டுவினைகளே பெரும்பாலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கிறன. இரண்டாம் நிலைக் கூட்டுவினைகள் புலனுறுப்புகளின் செயற்சிறப்பைக் கூறும் பொருட்டு மட்டுமே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. (இரண்டாம் நிலைக் கூட்டுவினைகள் யாவும் * குறியிடப் பட்டுள்ளன).

## 1.4.2. செயல்தன்மை

மனிதனது செயலும் எண்ணமும் அவன் பயன்படுத்தும் மொழியில் நகலாகப் படிகின்றது என்றால் மிகையாகாது. அவ்வகை மொழியின் பயனைப் பகுத்துப் பார்ப்போமானால் மு. வரதராசன் கூறுவதுப் போல், “ஒரு மொழியின் செழிப்பையும் வளர்ச்சியையும் மனிதனது செயலாற்றல் திறனை அடிப்படையாகக் கொண்டு அளவிடலாம்” என்பது முற்றிலும் உண்மை என்பதை உணரலாம். ஏனெனில் செயல் திறன் எப்பொழுதும்,

**1.4.2.1. செயல்நிலை**
**1.4.2.2. உணர்ச்சிநிலை**
**1.4.2.3. அறிவுநிலை**

*(மு. வரதராசனார், 1995 : 75)*

என்று பிரிவுபடுவது போல், மனிதன் படைத்திருக்கும் மொழியும் இம்மூன்று திறங்களையும் காட்டுவதாக அமைந்திருப்பதையும் காண முடிகிறது.

உலகில் நடக்கும் புறச்செயல்களை உட்கிரகித்து அறிந்து கொள்ள மனிதனுக்கு உறுதுணையாவது ஐம்புலன்கள் தான். கண், வாய், மூக்கு, செவி, உடல் போன்ற ஐம்புலன்களைச் சார்ந்தும், மனம், உணர்ச்சி, அறிவு எனப் பலதிறப்பட்ட உணர்வையும் செயலையும் வெளிப்படுத்தும் கூட்டுவினைகளாக இவை உருவாக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. புறவுலகில் நடைபெறும் செயலுக்கேற்ப ஐம்புலன்களை முடுக்கி விட்டு, உணர்வின் நிலையில் நின்று ஒரு செயலைக் கிரகித்துக் கொண்டு, உள்ளத்தில் பக்குவப்பட்ட அனுபவ மொழியாக இவை உருவெடுக்கின்றன. ஐம்புலன்களின் மூலம் உணர்ந்த புறப்பொருளை அறிவு நிலையில் உட்கிரகித்து அதனைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் மனிதனது ஆற்றலும் அவ்வேளையில் வெளிபடுகிறது. இவ்வாறான மனிதனது புலனறிவுத் திறனைக் கூட்டுவினைகளின் மூலம் பக்குவமாக வெளிப்படுத்தும் போது, மனித இனத்தின் அறிவு முதிர்ச்சியின் வெளிப்பாட்டையும் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள இவை உதவுகின்றன.

செயல்களைத் தெளிவிக்கும் திறம் கொண்ட இக்கூட்டுவினைகளை மூன்று பிரிவுகளாக இக்கட்டுரையில் பகுக்கப்பட்டுள்ளன :

**1.4.2.1. புலன் உறுப்புக்களின் துணையோடு நடத்தப்படும் செயல்கள்**
**1.4.2.2. உணர்ச்சிக்கு ஆட்பட்டுச் செய்யப்படும் செயல்கள்**
**1.4.2.3. அறிவு நிலைக்குட்பட்டு ஆற்றும் செயல்கள்**

இம்மூன்று நிலைகளிலும் உடலிலிருந்து சிறிது சக்தியை வெளிப்படுத்தி ஆற்றப்படும் செயல்கள் முடிவுறும்போது, அந்தந்தச் செயல்களின் திறத்திற்கு ஏற்ப நல்வினையையோ தீவினையையோ பயனாக வெளிப்படுவதுண்டு. அதன் அடிப்படையிலும் இவற்றை ஆராய்ந்து பார்க்கவும் வழியுண்டு.

### 1.5. கை சார்ந்த கூட்டுவினைகள்

கூட்டுவினைகளில் காணப்படும் பல செயல்கள் பிறவுறுப்புகளின் துணையில்லாமல் நேரிடையாகச் செய்விக்கப்படும் செயல்களாக உள்ளன. ஒரு செயலைச் செயல்படுத்தும் நிலையில் அதிக பங்காற்றுவது, கையும் உடலும்தான். அதிலும் குறிப்பாக மனிதனது அன்றாட தேவையை ஈடேற்றுவதற்கு உறுதுணை புரிவது கைகள்தான். புலன்களால் உணர்ந்து, அறிவுணர்ச்சியால் தெளிவுற்று, நுண்பொருளின் எல்லையிலிருந்து பருப்பொருள் எல்லைக்குச் செயலாய்க் கொணர்ந்து செயல்படுத்திக் காட்டும்

செயல்பாட்டைக் கைகள்தான் செய்கின்றன. இவற்றைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

**i. புலன்களினால் செய்விக்கப்படும் செயல்கள்**

| | | |
|---|---|---|
| கைபிடி | - | get married to someone |
| கைபற்று | - | possess something |
| கைது செய் | - | arrest |
| கைக்கட்டு | - | cap in hand - behave humbly |
| கைகாட்டு | - | guide someone |
| கைபோடு | - | touch someone with bad intentions |
| கைகொடு | - | render help |
| கைநனை | - | eat / make relationship |
| கைபார் | - | read one's palm |

**ii. உணர்வு வழி செயல்**

| | | |
|---|---|---|
| கைவிரி | - | unable to help someone |
| கையேந்து | - | beg for help |
| கையாடு | - | misuse others' property / embezzle |
| கைக்குள் போடு | - | possess someone |
| கைவிடு | - | abandon |
| கையைக்கடி | - | be affected / be helpless |
| கைதாகு | - | get arrested |
| கைதாக்கு | - | to be arrested |
| கைது பண்ணு | - | arrest |
| கை நீட்டு | - | steal / hit someone |
| கையகப்படு | - | take control |
| கையகப்படுத்து | - | take into control |
| கைவை | - | steal |
| கைகடி | - | spend more than what he can afford |
| கைகழுவு | - | let down |

### iii. அறிவு வழி செயல்

| | | |
|---|---|---|
| கைவரபெறு | - | master a method that leads the way to handle something |
| கைவசமாயிற்று | - | came into control |
| கைகண்ட | - | consider the best so far |
| கைகூடு | - | procession or trial which leads to success |
| கைதூக்கு | - | support some idea |
| கைகொள் | - | adopt / take to |

## 1.6. கால் சார்ந்த கூட்டுவினைகள்

நடமாடுவதற்கு மனிதனுக்கு மூலாதாரமாவது கால்கள்தான். இவ்வுறுப்பைச் சார்ந்தும் பல கூட்டுவினைகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நடத்தல், ஓடுதல், நடமாடுதல் போன்ற செயல்களைச் சார்ந்து இரண்டாம் நிலைக் கூட்டுவினைகளாக அதிகம் எழுந்துள்ளதையும் காண முடிகிறது. இவ்வகைக் கூட்டுவினைகளில் பொருள் தெளிவு முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதால் இவற்றை இரண்டு நிலைகளிலும் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| *ஓடியாடு | - | play around |
| *நடமாடு | - | wander about |
| *விளையாடு | - | play |
| *கூத்தாடு | - | dance |
| கால்கட்டுப்போடு | - | get someone to marry |

## 1.7 தலை தொடர்பான கூட்டுவினைகள்

மனிதனின் அதிமுக்கிய உடல் உறுப்புகளில் ஒன்று தலை. ஐம்புலன்களில் நான்கினைப் பெற்றிருப்பது தலைதான். அதனைச் சார்ந்து உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டுவினைகள் பல உண்டு.

### i. உணர்வு வழி செயல்

| | | |
|---|---|---|
| தலைகாட்டு | - | appear / show |
| தலைகொடு | - | render help |
| தலைபடு | - | come forward |

| | | |
|---|---|---|
| தலைநிமிர் | - | feel proud |
| தலைமறை | - | go underground |
| தலை வணங்கு | - | give respect |
| தலை முழுகு | - | give up |
| தலை தெறிக்க | - | post haste action to do something |
| தலைக்கேறு | - | increase in intensity |
| தலைகுனி | - | disgraced (by a shameful action) |
| தலைகீழாக நில் | - | be stubborn |
| தலையிடு | - | interfere in others' business |

**ii. அறிவு வழி செயல்**

| | | |
|---|---|---|
| தலைசாய் | - | agree |
| தலைமைவகி | - | preside over |
| தலையெடு | - | become famous |
| தலை தூக்கு | - | crop up / establish |
| தலைசிற | - | be outstanding |
| தலையாட்டு | - | nod as a sign of agreement |

## 1.8 கண் சார்ந்த கூட்டுவினைகள்

கண்வழி செய்யப்படும் செயல்கள் என்பது பொதுவாக உணர்ச்சிக்குட்பட்டு ஆற்றப்படும் செயல்களாகவே இருக்கின்றன. உணர்ச்சியை ஈர்க்கும் கவர்ச்சிப் பொருள் ஒன்றின் மேல் கவனத்தை இணைக்கும் போது, கண்கள் ஒரு சில செயலைச் செய்ய தூண்டுகிறது. கண்களால் செய்விக்கப்படும் செயல்களில் நல்வினைகளும், தீவினைகளும் இணைந்து நிற்கும் ஒரு நிலையைக் காண முடிகிறது. முதல் நிலையைச் சார்ந்து வரும் கூட்டுவினைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

**எ. கா. : கண்ணுறு கண்படு கண்வை**

இம்மூன்று செயல்களும் தீய நோக்கத்தைக் கொண்ட பார்வையைப் பிறர் மீது பதிக்கப்படும் செயலைக் குறிக்கின்றது. இவை பிறர் மீது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தன்மைகளைக் கொண்டிருப்பவையாகவும் அமைந்திருக்கின்றன. இவ்வகைக் கூட்டுவினைகளைப் பின்வருமாறு மேலும் விரிவாக வகுக்கலாம்.

### i. புலன்களினால் செய்விக்கப்படும் செயல்கள்

| | | |
|---|---|---|
| கண்ணுறு | - | hold in sight |
| கண்ணிமை | - | catch someone's attention / come into one's view |
| கண்சிமிட்டு | - | wink at someone |
| கண்விழி | - | wake up |
| கண்காணி | - | keep watch over someone |

### ii. உணர்வு வழி செயல்

| | | |
|---|---|---|
| கண்ணடி | - | wink to give a cue / tackle someone |
| கண்மூடு | - | died |
| கண்ணைக் கசக்கு | - | show visible signs of distress |
| கண்ணைப் பறி | - | dazzle the eyes |
| கண்படு | - | get affected by the evil eye |
| கண்கலங்கு | - | be in tears |
| கண்போடு | - | cast an evil eye |
| கண்வை | - | cast an evil eye |

### iii. அறிவு வழி செயல்

கண்ணோடு - at the point of view / attempt

### 1.9. செவி சார்ந்த கூட்டுவினைகள்

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதற்கு முக்கியச் சாதனமாக இருப்பது செவி எனலாம். பிறர் கூறும் கருத்தை ஏற்றுக் கொண்டு, கிரகித்து விட்டுப், பதில் மொழி கூறிட உதவுவது செவிதான். இவ்வுறுப்பையும் அதன் செயலினையும் சார்ந்து சில கூட்டுவினைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இச்செயல்கள் அனைத்தும் அறிவு நிலையில் இருந்து, மனிதன் செய்யும் பக்குவப்பட்ட செயல்களாக அமைந்திருக்கின்றன. இவை தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள கூட்டுவினைகளை உருவாக்கித் தருவதைக் காண முடிகிறது. இவ்வகைக் கூட்டுவினைகள் இரண்டு நிலைகளையும் சார்ந்து, எல்லைக்குட்பட்ட ஒரு சில சொற்களையே உருவாக்கித் தருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| எ. கா. : | செவிசாய் | - | agree to someone |
| | செவிகொடு | - | pay attention |
| | 'கேள்விபடு | - | listened |

| | | |
|---|---|---|
| *கேள்வியுறு | - | get the message |
| காதறு | - | shaming someone |

## 1.10. வாய் சார்ந்த கூட்டுவினைகள்

கண்களினால் பார்த்துச் செவிகளால் கேள்வியுற்று, உணர்வால் உணர்ந்து, அறிவு நிலையில் பதில் செயலை உருவாக்கும் போது, கைகளினாலும் உடலினாலும் செய்து முடிப்பது இறுதி நிலையாக அமைந்தாலும், ஒரு சில செயல்களை மனிதன் வாயளவில் செய்து விடுவதும் உண்டு. இவ்வகைச் சொற்கள் இரண்டு நிலைகளையும் சார்ந்த கூட்டுவினைகளை உருவாக்கித் தருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| எ. கா. : | *போரடி | - | bore someone |
| | வாயடி | - | be talkative |
| | *உரையாடு | - | converse |
| | *உரையாற்று | - | give a speech |
| | *வாதாடு | - | argue |
| | *வழக்காடு | - | argue |

இவ்வாறான செயல்கள் உணர்வு மற்றும் அறிவு நிலையில் செய்விக்கப்படுவதை மட்டுமே காண முடிகிறது. மேலும், பொதுநிலையில் வாயினால் செய்விக்கப்படும் செயல்களில் குறைந்தது இருவர் ஈடுபட்டிருப்பதையும் காண முடிகிறது.

## 1.11. மூக்கு சார்ந்த கூட்டுவினைகள்

மூக்கு மனிதன் சுவாசிப்பதற்கு மட்டும் பயன்படுவதில்லை. சுவாசிப்பது முக்கியப் பணியாக இருந்தாலும், அதனோடு, வாசனையையும் நாற்றத்தையும் பாகுபடுத்தி உணர்ந்து கொள்ளவும் மூக்கு பெரிதும் பயன்படுகிறது. மூக்கினைச் சார்ந்து எழுந்துள்ள கூட்டுவினைகளை ஆராய்வோமானால், இரண்டாம் நிலையில் செய்விக்கப்படும் தொழிலைச் சார்ந்து படைக்கப்பட்டுள்ள கூட்டுவினைகள் தான் அதிகம் காண முடிகிறது. அவையாவன :–

| | | |
|---|---|---|
| *நாற்றமெடு | - | smell |
| *நாற்றமடி | - | smell |
| *மூச்சுவாங்கு | - | take a deep breath |
| *மோப்பம்பிடி | - | take the smell |
| *மூக்கறு | - | shame someone |

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் முதல் இரண்டு கூட்டுவினைகளும் ஒரே பொருளையே கொடுக்கின்றன.

## 1.12 புலன்களினால் செய்விக்கப்படும் செயல்கள்

மனிதன் ஐம்புலன் (கண், மூக்கு, காது, வாய், மெய், கால், கை)களையும் பயன்படுத்தி உணர்ச்சி நிலையிலும் செயல் நிலையிலும் செயல்பாட்டைத் துலக்குவதோடு நின்று விடுவதில்லை. சில வேளைகளில் எல்லா உடல் உறுப்புகளையும் ஒன்றிணைத்துச் செயலாற்றும் பாங்கையும் ஆங்காங்கே காண இயல்கிறது. இவ்வாறான செயல்களைக் கூட்டுவினைகளாக உருவாக்கிக் காட்டும்போது அவற்றின் பொருள் வெளிப்பாடு மிகவும் சிறப்பாக உணர்த்தப்படுகின்றன.

## 1.13 உணர்ச்சிக்கு ஆட்பட்டுச் செய்யப்படும் செயல்

மனிதன் கையாளும் மொழியிலும் சரி, அவனது செயலிலும் சரி, அவனது உணர்ச்சியே முக்கிய இடம் பெறுகின்றது. மனிதனது அன்றாட நிகழ்ச்சிகள் இன்ப துன்பம் என்னும் இரு பெரு எல்லைக்குட்பட்டுச் செயல்படுகிறது. இவ்விரு பெரு எல்லைக்குள் ஆயாசம், பதற்றம், சோகம், சோர்வு, கலக்கம், அதிர்ச்சி, அச்சம் போன்ற பல்வேறு உணர்ச்சிக் கூறுகளை முன்வைத்து தம் வாழ்வைப் பண்படுத்திக் கொள்கிறான். இவ்வகை உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு மனிதன் வெறும் ஜடமாகவே கருதப்படுகிறான். அதேபோல் தான், இக்கூறுகளை உட்படுத்தாத மொழியினத்திற்கே சிறப்பொன்று மில்லை எனத் துணிந்து கூறலாம்.

இவ்வாறு நவரச உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி உள்ளத்தில் உள்ள கடப்பாட்டைத் தெளிவாகக் கூற முயற்சிக்கும் வேளையில் இவ்வகைக் கூட்டுவினைகள் தேவையாகின்றன. சாதாரணச் சொற்களைக் கொண்டு அசாதாரண உணர்ச்சி வெளிப்பாட்டைக் காட்டிட இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு உணர்வின் வேகத்திற்கு உட்பட்டு மனிதன் ஆவேசத்தில் செயலாற்றுவதைக் குறித்திட பல சொற்கள் இருக்கின்றன. உணர்ச்சி மேலீட்டால் செய்யப்படும் அனைத்துச் செயல்களும் அதன் பயனைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு விளைவிக்கப் பட்டவையாகவே இருக்கின்றன. எல்லாச் செயல் நிலையிலும் உணர்ச்சியின் வேகமானது பிறரது உடைமைகளுக்குச் சேதம் விளைவிக்கும் செயல்களாகவே அமைந்திருக்கின்றன. காட்டாக :–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *கொள்ளையடி | - | rob | *கொள்ளையிடு | - | rob |
| *களவாடு | - | smuggle | *சூறையாடு | - | smuggle |

போன்ற கூட்டுவினைகளும் இந்தப் பணியையே செய்கின்றன.

ஒருவரது உடமையை அவரது சம்மதமின்றியோ அவரறியாமலோ தம்முடையதாக்கிக் கொள்ளும் செயலைக் குறிக்க தமிழில் பல்வேறு சொற்கள் உள்ளன. மேலுள்ள கூட்டுவினைகளும் இந்தப் பணியையே செய்கின்றன. இவற்றுக்குப்பால் மனிதனது அருவப்புலனுருப்பான மனம் சார்ந்த கூட்டுவினைகள் சிலவும் உருவாகியிருப்பதைக் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| மனமிறங்கு | - | feel sympathy |
| மனமூன்று | - | pay attention |
| மனமுருகு | - | melt (at heart) |
| மனமுவந்து | - | voluntarily |
| மனந்தளர் | - | list / give away a hope |
| மனந்தளர்ச்சியடை | - | be motivated |
| மனங்குலை | - | be shattered |
| மனம்வை | - | be confident or focus your attention toward something |

## 1.14 அறிவு நிலைக்குட்பட்டு ஆற்றும் செயல்நிலை

பகுத்தறிந்து ஒரு செயலைச் செயல்படுத்தும் நிலையே அறிவு நிலைக்குட்பட்டு ஆற்றப்படும் செயல் எனலாம். இச்செயலானது உணர்ச்சி நிலைக்கும் செயல்நிலைக்கும் அப்பாற்பட்ட ஒரு நிலையல்ல. உணர்ச்சிக்கு ஆட்பட்டு ஒரு செய்கையில் ஈடுபடும் மனிதன், அதனைச் செயலாக நிறைவேற்றும் வேளையில் அவனுக்குப் பக்கப்பலமாக அமைந்து விடுவதுதான் பகுத்தறிவு. உணர்ச்சியின் வேகத்தில் ஆட்பட்டுத் தன்னைச் சீரழித்துக் கொள்ளாமல் நன்மையை உணர்ந்து தீமையை விலக்கிச் செயலில் நல்வண்ணத்தை ஈடேற்றும் பொருட்டு அறிவு நிலையில் செயல்படும் தன்மைகளை மேலே குறித்தக் கூட்டுவினைகளிலும் ஓரளவு காண இயல்கிறது.

அறிவு நிலையில் நிறைந்து, பகுத்தறிந்து செயல்களைக் புலன்களின் மூலம் செய்விக்கும் போது மனிதன் அனுபவ ஞானம் மேலிட்டு, உணர்ச்சிக்கு அடிப்பணியாத பாங்கு மேலிடுவதைக் காண முடிகிறது. அறிவு நிலையில் செயல்படுத்தும் போது சுயத் தேவையைக் காட்டிலும் செய்யும் செயலின் பயனைப் பொதுவயப்படுத்தும் நோக்கம் தான் மேலோங்கி நிற்கிறது.

உணர்ச்சி, அறிவு, செயல்திறம் ஆகிய மூன்று நிலைகளையும் தம்முள் அடக்கும் செயல்

திறன்மிக்க சொற்கள் சிலவற்றையும் கூட்டுவினை வடிவங்களின் மூலம் ஆங்காங்கே உருவாக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. முதலில் அறிவு உணர்ச்சி நிலையில் சஞ்சரித்து, அதனை அறிவு நிலையில் ஆட்படுத்திக் கொண்டு, செயல் திறத்தில் தனது பரிவை உட்படுத்திப் பொருள் கூறும் சொற்களாக இவை இருக்கின்றன.

## 1.15 எதிர்கால ஆய்வுநிலை

இன்றைய பயன்பாட்டில் இவ்வகைக் கூட்டுவினைகளின் சொற்பொருண்மை சூழல் என்பது பார்த்தக், கேட்ட மாத்திரத்திலேயே உணரக்கூடிய ஒன்றென்றாலும், அவை உணர்த்திடும் நுண்ணிய பொருள் செறிவை வாக்கியச் சூழலிலேயே அறிந்துணர வேண்டிய தேவை உள்ளது. அந்நிலையில் தான் ஒரு பொருள் எச்சூழலை விளக்க உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை நன்குணர முடியும். இதனைப் பற்றிக் கருத்துரைக்கும் பீட்டர் என்பவர்,

> ....... syntactical construction express intention. It's true that it expressed the desire or intention more effectively. (W. Peter, 1976 : 5)

என்கிறார்.

ஒரு மொழியில் பல கூறுகளைப் பயன்படுத்திக் கருத்தைப் பிறரிடம் கூறுபவர்கள் வெறுமனே கிடைக்கப் பெற்ற சொற்களை இணைத்துக் கருத்துக் கூறிட வாய்ப்பு ஏற்படுவதில்லை. அக்கருத்தை வெளிப்படுத்தும் வேளையில், அந்த வாக்கியத்தில் நிலைபெறும் முக்கியக் கருத்துக் கூறும் கூறுதான் நிர்ணயம் செய்யும். குறிப்பாகக் கூட்டுவினைகள் இடம் பெறும் வாக்கியங்களில் இத்தெளிபைச் சிறப்பாக உணர முடிகிறது. அவ்வாறு சிறப்புற்று விளங்கும் கூறுகள் வாக்கியச் சூழலில் முக்கியப் பங்காற்றிடும்.

இவரது சிந்தனைப்படி, வாக்கியச் சூழலில் கூட்டுவினைகளை வைத்து ஆராய்ந்து பார்ப்போமானால், இவை ஆற்றும் அளப்பரிய பங்கினையும் வகுத்துக் காண வழி ஏற்படும் எனத் திண்ணமாக நம்பலாம்.

## 1.16 முடிவுரை

மனிதன் ஒரு பேசும் மிருகம் மட்டுமல்ல. அவன் அன்றாட வாழ்வில் நடமாடும் மிருகமும் கூட எனலாம். அன்றாட நிகழ்ச்சிகளை அவன் ஆற்றுவதற்கு உறுதுணை செய்வது உடல் உறுப்புக்கள் தான். அவை மனிதனது சிந்தனையில் உதிக்கும் அனைத்து

செயல்களையும் செய்விக்கும் ஒரு நடுநாயகமாக விளங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன. இத்தகைய அனைத்து செயல்முறைகளையும் நிர்ணயிப்பது அறிவு நிலை என்றாலும், மனிதன் முதலில் தனது ஐம்புலன்களால் அதனை உட்கிரகித்து உணர்வின் வழி ஆட்படுத்திக் கொண்டு, பகுத்தறிவினால் பகுக்கப்பட்ட நிலையில் எதிர்செயலைப் படைப்பிக்கும்போது, அதனைச் செயல்படுத்துவது புலன்கள்தான். இரு கைகள் இணைந்து செயல்படுத்தும் செயலானது உடல், மனம், அறிவு மற்றும் ஐம்புலன்களும் ஒருமித்து நின்று செயலாக்கத்தை நிகழ்த்துவதைக் காண முடிகிறது. அந்நிலையில் ஒவ்வொரு செயல்களையும் செய்விக்கும் போது உடலில் இருந்து சக்தியை (force) வெளிப்படுத்தி அனைத்துக் காரியங்களையும் செய்து முடிப்பதைக் காண முடிகிறது.

உடலிலிருந்து சிறிது சக்தியை வெளிப்படுத்தி ஆற்றப்படும் செயல்கள் யாவும் முடிவுறும் போது, அந்தந்தச் செயல்களின் திறத்திற்கு ஏற்ப நல்வினையையோ தீவினையையோ பயனாக வெளிப்படுத்துவதுண்டு. இந்தப் பயன் பிரதிபலிப்பானது பயனை,

I. **தன் வயமாக்கிக் கொள்ளும் முயற்சி**
II. **பிற வயமாக்கிக் கொள்ளும் முயற்சி**

என்ற பிரிவுகளின் அடிப்படையிலும் அமைத்துப் பார்க்கவும் வழிவிடுகிறது.

## மேற்கோள் நூல்கள்


1. *மருத்தூர் அரங்கரசன்*, 1994, **இலக்கியமும் மரபுத் தொடரும் : ஆய்வுக்கோவை,** புதுச்சேரி, இந்திய தமிழ் ஆசிரியர் மன்றம்.

2. *தங்கமணியன்*, 1986, **பத்திரிகை மொழிநடை,** திருச்சி : மாணிக்கப் பதிப்பகம்.

3. **Culiveer Peter, W.**, 1976. Syntax, New York : Academic Press

4. *மு. வரதராசனார்*, 1955. **மொழிநூல்,** திருநெல்வேலி : சைவச் சித்தாந்த நூற்பதிப்பு கழகம்.

5. **தொல்காப்பியம் சொல்லதிகாரம்,** 1994, அண்ணாமலை நகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.